Literacy for a Billion

Movie: Satham Podathey
Year: 2007

Song: Azhaku Kutti
Lyricist:

அழகு குட்டி செல்லம்
உன்னை அள்ளி தூக்கும்போது
உன் பிஞ்சு விரல்கள் மோதி
நான் நெஞ்சம்
உடைந்து போனேன்
ஆளை கடக்கும் பொழுது
உன் கன்னக்குழியின் சிரிப்பில்
விரும்பி மாட்டிக் கொண்டேன்
நான் திரும்பி போகமாட்டேன்
அம்மு நீ என் பொம்பு நீ
வம்பு நீ என் மின்மினி
உனக்கு தெரிந்த மொழியிலே
எனக்கு பேச தெரியலே
எனக்கு தெரிந்த பாஷை பேச
உனக்கு தெரியவில்லை
இருந்தும் நமக்குள்
இது என்ன புதுப்பேச்சு
இதயம் பேச
எதற்கிந்த ஆராய்ச்சி
ஜின்ஜனிச்ச ஜின்ஜனிச்ச
ஜின்ஜனி
மஞ்சனிச்ச மஞ்சனிச்ச
மஞ்சரி
அழகு குட்டி செல்லம்
உன்னை அள்ளி தூக்கும்போது
உன் பிஞ்சு விரல்கள் மோதி
நான் நெஞ்சம் உடைந்து
போனேன்
ஆளை கடக்கும் பொழுது
உன் கன்னக்குழியின் சிரிப்பில்
விரும்பி மாட்டிக் கொண்டேன்

நான் திரும்பி போகமாட்டேன்
ரோஜாப்பூ கை ரெண்டும்
காற்றோடு கதை பேசும்
உன் பின்னழகில்
பௌர்ணமிகள்
தகதிமிதா ஜதி பேசும்
எந்தநேரம் ஓயாத அழுகை
ஏனிந்த முட்டிக்கால்
தொழுகை
எப்போதும் இவன் மீது
பால்வாசனை
என்ன மொழி சிந்திக்கும்
இவன் யோசனை
எந்த நாட்டை
பிடித்துவிட்டான்
இப்படியோர்
ரத்தினக்கால் தோரணை
தோரணை
ஜின்ஜனிச்ச ஜின்ஜனிச்ச
ஜின்ஜனி
மஞ்சனிச்ச மஞ்சனிச்ச
மஞ்சரி
அழகு குட்டி செல்லம்
உன்னை அள்ளி தூக்கும்போது
உன் பிஞ்சு விரல்கள் மோதி
நான் நெஞ்சம் உடைந்து
போனேன்
ஆளை கடக்கும் பொழுது
உன் கன்னக்குழியின் சிரிப்பில்
விரும்பி மாட்டிக் கொண்டேன்
நான் திரும்பி போகமாட்டேன்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.